OS.No. 131/2015

Dated :02.03.2024

Time: 01.40 p.m to 01.45 p.m

P.W- 2 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 4ம் பிரதிவாதி சார்பாக குறுக்கு விசாரணை

<u>**4**ம் பிரதிவாதி சர்பாக குறுக்கு விசாரணை</u>

1) எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதிகள் அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 1ம் வாதி பெத்தநாயக்கன் பாளையம் 3 வது வார்டில் வசித்து வருகிறார். நானும் அங்கு தான் வசித்து வருகிறேன். தாவா சொத்திற்கும் 3 வது வார்டுக்கும் எவ்வளவு தூரம் என்றால் சொத்து பற்றி தெரியாது. தரப்பினர்கள் இடையே என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. நான் முதல் விசாரணையில் கையெழுத்து கேட்டதால் தட்டச்சு செய்து வைத்து இருந்ததில் கையொப்பம் செய்தேன்.

2) கணேசனின் முதல் மனைவி ஈஸ்வரி தற்போது உயிருடன் இல்லை. ஈஸ்வரி உயிருடன் இருந்த போது எங்கு வாழ்ந்தார் என்றால் பெரியம்மாளிடம் ஒரே குடும்பமாகத்தான் வாழ்ந்தார்கள். 4ம் பிரதிவாதி பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அது என்ன மாதிரியான சொத்து என்று எனக்கு தெரியாது. அதில் வீடு உள்ளதா என்பதும் எனக்கு தெரியாது. மேற்படி சொத்து பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அது யார் யாருக்கு உரிமை என்பதும் எனக்கு தெரியாது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

Sd/-K.Ananthan

**Subordinate Judge,**

**Attur.**